# மான்மின் செய்திகள்
# Manmin News



Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


## “ஆதி திருச்சபை செய்ததைப் போல ஒவ்வொரு நாளும் நாம் ஆலயத்தில் ஜெபிக்கிறோம்”

### தொடர்ச்சியான இரு முறை சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டம் நிறைவுபெற்றது





தானியேல் ஜெபக்கூட்டத்தில் உலகம் முழுவதிலிருந்து பெரும் எண்ணிக்கையிலான அங்கத்தினர்கள் GCN மற்றும் இணையம் வழியாக ஒருங்கிணைந்து ஜெபிக்கின்றனர். தொடர்ச்சியாக பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்கின்றனர். குறிப்பாக, சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தின் கடைசி நாளில் ஒரு சந்தோஷமான பரிசளிப்பு விழா நடைபெற்றது.

முதல் பாதி ஆண்டிற்கான சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டம் பிப்ரவரி 20, 2017ல் ஆரம்பமாகி ஏப்ரல் 2 ஆம் தேதி வரை 42 நாட்களாக நடைபெற்றது. மான்மின் ஜெப மையத்தின் தலைவி திருமதி. போக்னிம் லீ அவர்கள் ஜெபத்தை நடத்தினார்கள்; பங்குப்பெற்றவர்கள் பரலோக சிங்காசனத்தை எட்டுகின்ற அதிர்வலையைப் போன்றதொரு ஊக்கமான ஜெபத்தின்மூலமாக தேவனுடைய பதில்களைப் பெற்றுக்கொண்டனர். வாரநாட்களில் இரவு 9 மணி முதல் 11.40 மணி வரையும், வார இறுதியில் இரவு 11 மணிவரையும் (கொரிய உள்ளூர் நேரப்படி) நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை முழு–இரவு ஆராதனை இருப்பதால் அன்று ஜெபக்கூட்டம் நடைபெறாது.

தானியேல் அவரின் ஜெபத்திற்கு 21 நாட்களில் பதிலைப் பெற்றார் (தானியேல் 10:12–14). தானியேலின் இந்தச் சம்பவத்தினால் ஜெபக் கூட்டத்திற்கு தானியேல் ஜெபக்கூட்டம் என்று பெயரிடப்பட்டுள்ளது. மான்மின் ஜெப மையமானது ஒவ்வொரு 21 நாட்களுக்கு புதிய ஜெபக் கூட்டங்களை வெவ்வேறான ஜெபத்தலைப்புகளின் கீழ் நடத்துகிறது; மேலும், ஒரு வருடத்திற்கு இரண்டு தடவையாக இருமுறை சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தை நடத்துகிறது. 2017ம் ஆண்டின் முதல் கூட்டம் “மேய்ப்பரின் கண்ணீரின் கனிகள்” என்ற பிரதான தலைப்பின்கீழ் நடைபெற்றது.

துவக்க துதிப்பாடல்கள் இரவு 8.40 மணிக்கு (கொரிய நேரப்படி) ஆரம்பமானது. பிப்ரவரி 20 முதல் நாள் அன்று, பங்குப்பெற்றவர்கள் ஜெபமலை வீட்டிலிருந்து ஜெபித்த தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஆசீர்வாத ஜெபத்தைப் பெற்றுக்கொண்டனர். கடைசி நாளான ஏப்ரல் 2 அன்றும் அறிவர். லீ ஆசீர்வாதங்களுக்காக மீண்டும் பாரத்தோடு ஜெபித்தார்.

குறிப்பாக, இந்த ஜெபக்கூட்டத்தில் கொரியாவிற்கு உள்ளும் வெளியேயும் உள்ள 11,000க்கும் மேற்பட்ட கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகளின் அங்கத்தினர்கள் GCN TV மற்றும் இணையம் வழியாக பங்குப்பெற்றனர். நேர வித்தியாசத்தின்நிமித்தம் மற்ற அநேக பங்காளர்கள் பதிவுசெய்யப்பட்ட ஒளிபரப்பின் மூலமாக பங்குப் பெற்றார்கள். இந்த சிறப்பு தானியேல் ஜெபக் கூட்டத்தில் பங்குப்பெற்று ஜெபித்ததன் மூலமாக அநேக அங்கத்தினர்கள் ஆண்டவரின் இருத–யத்தை அடையப்பெற்றனர்; தங்கள் குடும்பத்திற்கு சுவிசேஷம் அறிவித்தனர்; அவர்களது தொழிலில் ஆசீர்வாதங்களைப் பெற்றனர்; அவர்களுடைய பிரச்சனைகளுக்கு தீர்வைப் பெற்றனர்; அவர்களின் இருதய விருப்பங்களுக்குப் பதில்களைப் பெற்றுக் கொண்டனர் (இது பற்றிய கூடுதல் செய்திகளுக்கு 4–ம் பக்கம் பார்க்கவும்).

மான்மின் தலைமை சபை அங்கத்தினர்கள் ஆதி திருச்சபையின் அங்கத்தினர்களைப்போலவே ஒருமனப்பட்டவர்களாய் அநுதினமும் ஆலயத்தில் கூடுகின்றனர். அவர்கள் தேசிய சுவிசேஷ ஊழியத்திற்காக, உலக ஊழியத்திற்காக, தேவ ராஜ்யத்திற்காக மற்றும் நீதிக்காக ஜெபிக்கின்றனர். அப்படிப்பட்ட ஜெபங்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடையவும், தேவராஜ்யத்தினை விரிவுப் படுத்தவும் உதவிகரமாக அமைந்துவருகின்றன. இதுபோன்ற ஊழியச் செயல்கள் திருச்சபையானது உலகத்திலுள்ள எண்ணற்ற ஜனங்களுக்கு ஜீவ வார்த்தை மற்றும் வல்லமையான கிரியைகளை அறிவிக்கவும், 11,000க்கும் மேற்பட்ட கிளை மற்றும் ஒருங்கிணைந்த சபைகளை 35 ஆண்டுகளுக்குள் பெற்ற ஒரு பெரிய சபையாக உருவெடுக்கும்படியான உந்து சக்தியாகவும் உள்ளன.

## போதகர்கள், மிஷனரிகள் மற்றும் லேவி பணியாளர்கள்

பிப்ரவரி 15, 2017 அன்று காலை 11 மணிக்கு, ஒருங்கிணைந்த பரிசுத்த இறையியல் பாடசாலையின் 25வது மற்றும் மான்மின் சர்வதேச வேதபாட–சாலையின் 10வது பட்டமளிப்பு விழா தலைமை ஆலயத்தில் நடைபெற்றது. அகடாமியின் இயக்குனர் போதகர் ஜோங்வொன் லீ நிகழ்ச்சியை நடத்த மூப்பர் போவாஸ் ஜெ. லீ ஜெபித்தார். அதன்பின்னர், பரலோக குரல் குழுவினர் சிறப்பு துதியை வழங்கினர். பாடசாலையின் முதல்வர் போதகர் சங்தே கிம் 2 கொரிந்தியர் 9:10ம் வசனத்திலிருந்து எடுத்து “சிறியவை–களிலிருந்து” என்ற தலைப்பின்கீழ் செய்தியை பிரசங்கித்தார். அகடாமியின் செயல்பாடுகள் அறிவிக்கப்பட்டன. வேத பாடசாலைகளின் தலைவர் அறிவர். எஸ்தர் ச்சங் பட்டத்தை வழங்கினார். இறையியல் குழுமத்தின் தலைவர் விருது போதகர் க்வங்யு லீ அவர்களுக்கும் (படம்), வேதபாடசாலையின் தலைவர் விருது போதகர் ஜியாங் லீ அவர்களுக்கும் சென்றது.



ஆவிக்குரிய ரீதியில் தகுதிவாய்ந்த போதகர்கள், மிஷனரிகள் மற்றும் லேவி பணியாளர்களை உருவாக்கும் முயற்சியின் பலனாக 25வது பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற அநேகர் வெளிநாட்டு மிஷனரிகள், கிளை சபைகளின் போதகர்கள், மாநில போதகர்கள், மான்மின் தலைமை சபையில் வழிநடத்தும் போதகர்கள் மற்றும் லேவி பணியாளர்களாக ஏற்கனவே தங்களது ஊழியத்தை ஆரம்பித்து விட்டனர்.

2017ல், அறிவர். எஸ்தர் ச்சங் அவர்கள் தேவனுடைய அநாதி தீர்மானத்திற்குள் ஒருங்கிணைந்த பரிசுத்த இறையியல் வேதபாடசாலையின் தலைவராக பொறுப்பேற்றார். அவர் அநேக போதகர்களை மட்டுமல்ல கூடுதலாக அநேக பணியாளர்களையும் பல்வேறு துறைகளில் பயிற்றுவிக்க திட்டமிட்டுள்ளார். முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டுகளில் மாணவர்கள் தங்களது விசுவாசத்தில் வளர மற்றும் ஆற்றலை பெருக்கிக்கொள்ள ஒன்றாக கற்றுக்கொள்வார்கள். இளநிலை ஆண்டிலிருந்து ஒரு போதகராக, ஒரு மிஷனரியாக, லேவி பணியாளர் அல்லது லேவியனல்லாத பணியாளர் என எதில் தொடரவேண்டுமோ அதைத் தேர்வுசெய்து கொள்வார்கள். நான்காம் ஆண்டில், அவர்களுடைய செயல்திறனின்படி அவர்கள் ஒரு போத–கராகவோ அல்லது ஒரு பணியாளராகவோ நியமிக்கப்படுவார்கள்.

# “ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக”



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்”
(யாத்திராகமம் 20:8–11).

தேவன் தம்முடைய பிள்ளைகள் தங்களது சூழ்நிலைகளை நிர்வாகிக்கவும், கர்த்தருடைய நாளை பரிசுத்தமாய் ஆசரித்து கைக்கொள்ளவும் வேண்டும் என விரும்புகிறார். நாம் அதை பரிசுத்தமாய் ஆசரிப்பது எப்படி என பார்ப்போம்.

### 1) நாம் நம்முடைய சரீரத்தையும் இருதயத்தையும் பரிசுத்தப்படுத்த வேண்டும்.

யூதர்கள் ஓய்வுநாளுக்கு முந்தைய நாளை “ஆயத்தநாளாக” நியமித்துள்ளனர். அவர்கள் தூரஇடங்களுக்கு பிரயாணம்பண்ணும்போதும்கூட, அவர்கள் ஆயத்தநாளிலே வீட்டிற்கு திரும்பி வந்து ஓய்வுநாளை ஆசரிப்பார்கள்.

ஓய்வுநாளை நம்முடைய வாழ்வின் மையமாக வைத்துக்கொள்வதில் நாம் அவரவர்களுடைய மனப்பான்மையையும் இருதயத்தையும் பின்பற்ற வேண்டும்.

நாம் ஓய்வுநாளை எதிர்நோக்கியிருந்தால் நாம் அதற்கு ஆயத்தப்படுவோம். நாம் தேவனுக்குச் செலுத்தும் காணிக்கைகளைகூட ஆயத்தம் செய்வோம். நாம் ஓய்வுநாளுக்காக ஆயத்தமாகும்படி நமது வீட்டை சுத்தம்செய்து, துணிகளை துவைத்து அல்லது குளித்து அல்லது முடியை வெட்டி திருத்தம் செய்வோம். நாம் நம்முடைய சூழ்நிலையையும் சரீரத்தையும் சுத்தம் செய்வது முக்கியம் தான். ஆனால் நம்முடைய இருதயச் சுத்திகரிப்பே மிக முக்கியமானதொன்றாகும்.

இதைச் செய்வதற்கு, ஓய்வுநாளிலே நாம் உலகப் பொழுதுபோக்குகளில் பங்குபெறக்கூடாது. விசுவாசத்தோடு பரிசுத்த ஓய்வுநாளை ஆசரிக்கிற நீங்கள் ஓய்வுநாளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்கமாட்டீர்கள். நீங்கள் விளையாட்டு, திரைப் படம் அல்லது பூங்காவிற்கு செல்வது போன்ற உலகப் பொழுதுபோக்குகளை அனுபவிப்பதற்கு பிறரை சந்திக்கக்கூடாது.

கர்த்தருடைய நாள் என்பது ஜீவ அப்பத்தை பிட்டு, தேவனை துதித்து ஜெபித்து, விசுவாசிகளோடு சம்பாஷித்து ஆவிக்குரிய இளைப்பாறுதலை அனுபவிக்கிற நாளாகும். நம்முடைய இருதயத்தை பரிசுத்தமாய் காத்துக்கொள்வதற்கு, நாம் பார்க்கிற மற்றும் கேட்கின்றவற்றை கட்டுப்படுத்துவது என்பது நமக்கு மிக முக்கியம். ஆதலால், கர்த்தருடைய நாளை தேவனுடைய ஆலயத்தில் செலவழிப்பதே மிகச் சரியானதாகும். மற்ற சூழ்நிலைகளையும்கூட எவ்வளவு சாத்தியமோ அவ்வளவாய் ஆவிக்குரியதாய் மாற்றுவது சாலச் சிறந்தது.

சில மக்கள், “எந்த ஒரு பொழுதுபோக்கும் இல்லாமல் விடுமுறை நாளிலே திருச்சபையில் முழு நாளையும் செலவழிப்பதில் என்ன இன்பம் உள்ளது?” என்று நினைக்கலாம். ஆனால் நாம் உலகச் சிற்றின்பங்களில் பங்குப்பெற்றால், நாம் மகிழ்ச்சியையும் இளைப்பாறுதலையும் கொண்டிருக்க முடியுமா? அக்கனப்பொழுதில் நமக்கு இன்பம் இருக்கலாம், நாம் இளைப்பாறுகிறோம் என்று நினைக்கலாம். ஆனால் அது சீக்கிரமாக மறைந்துபோகக்கூடிய தற்காலிக சிற்றின்பம் மட்டுமே. அது நம்முடைய வாழ்வின் கவலைகளையோ நம்முடைய வாழ்வின் பிரச்சனைகளையோ தீர்க்காது. ஆனால் கர்த்தரில் இளைப்பாறுகிற மகிழ்ச்சி என்பது தேவனால் அருளப்படுகிற மெய்யான மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஏசாயா 58:13–14ல் வாசிக்கிறது, “என் பரிசுத்த நாளாகிய ஓய்வுநாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, உன் வழிகளின்படி நடவாமலும், உனக்கு இஷ்டமானதைச் செய்யாமலும், உன் சொந்தப் பேச்சைப் பேசாமலிருந்து, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால், அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்; பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி, உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன்; கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.”

நாம் கர்த்தருடைய நாளை பரிசுத்தமாய் ஆசரித்தால் தேவன் நமது வாழ்வு, ஆரோக்கியம், பிள்ளைகள் மற்றும் வேலைகளுக்காக பொறுப்பெடுத்துக்கொள்வார். பின்பு நாம் மெய்யான மகிழ்ச்சியையும் மெய்யான இளைப்பாறுதலையும் அதிகமான உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடும் பரலோக ராஜ்ஜியத்தின் நம்பிக்கையோடும் பெற்றுக்கொள்வோம்.

### 2) நாம் எந்த ஒரு பொல்லாங்கும் செய்யாதபடிக்கு நம் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும்.

நாம் ஆராதனைகளில் பங்குப் பெற்றுக்கொண்டு இருந்தாலும்கூட மற்ற பரிசுத்தக் கூட்டங்களில் பங்கு பெற்றுக்கொண்டிருந்தாலும்கூட, நாம் சண்டை சச்சரவுகள் அல்லது கோபம் கொண்டால் அது தேவனை துக்கப்படுத்தும். கூடவே, உலகக் காரியங்களைக் குறித்த கவலைகளினால் உடைந்த இருதயத்தோடு நீங்கள் ஓய்வுநாளை செலவழித்தால், அப்போது தேவனால் உங்கள் ஆராதனைகளை பிரியத்துடன் ஏற்க முடியாது. ஆக, நாம் ஓய்வுநாளிலே செய்ய வேண்டிய காரியங்களை செய்கையில் நாம் நன்றியோடும் மகிழ்ச்சியோடும் இருக்க வேண்டும்.

நாம் கஷ்டமான சூழ்நிலைகளில் இருந்தாலும்கூட, நாம் களிகூர்ந்து விசுவாசத்துடன் நன்றி செலுத்த வேண்டும். அப்போது தேவனால் கைகூடாததை கைகூடவும் செய்து சூழ்நிலைகளை மாற்றவும் முடியும். உண்மையில், ஆவியின் நிறைவோடிருக்கிற ஒரு உண்மையான கிறிஸ்தவன் அநுதினமும் நன்றியோடும் சந்தோஷத்தோடும் இருக்க வேண்டும்.

### 3) நாம் முழு நாளையும் பரிபூரணமாக ஏறெடுக்க வேண்டும்.

நாம் ஞாயிறு காலை மற்றும் ஞாயிறு மாலை ஆகிய இரண்டு ஆராதனைகளிலும் பங்குப்பெற வேண்டும். சில மக்கள் காலை ஆராதனைகளில் மட்டும் பங்குப் பெறுவார்கள். மத்தியானத்தில் அவர்கள் தங்கள் வேலைகளை செய்வார்கள் அல்லது சாப்பிடுவதற்கு ஏதாகிலும் வாங்கும்படி வெளியே போய்விடுவார்கள். அவர்கள் அதிகமாக பணம் சம்பாதிக்க போய்விடுவார்கள் அல்லது ஏதாகிலும் தாங்கள் அனுபவிக்க சென்றுவிடுவார்கள். நாம் அதனால் ஓய்வுநாளை முழுமையாக ஆசரித்தோம் என்று சொல்ல முடியாது.

நாம் காலை ஆராதனைகளில் மட்டும் பங்குப் பெற்றால் அல்லது மாலை ஆராதனைகளில் மட்டும் பங்குப்பெற்று பின்பு வேலையோ அல்லது நம்மை நாம் அனுபவித்தாலோ நாம் முழு நாளை பரிசுத்தமாக ஆசரிக்கிறதில்லை. நீங்கள் இரண்டு ஆராதனைகளிலும் பங்குப்பெற்றாலும்கூட, நீங்கள் செய்யப்போகிற வேலையை குறித்து அல்லது ஆராதனைகளுக்கு பிற்பாடு நீங்கள் திட்டமிட்ட பொழுதுபோக்குகளை குறித்து நினைத்தால், நீங்கள் ஆராதனைகளில் தூங்கிகூட விழுவீர்கள். ஆகையால் கர்த்தருடைய நாளை பரிசுத்தமாக ஆசரிப்பதற்கு, நீங்கள் காலை மற்றும் மாலை ஆகிய இரண்டு ஆராதனைகளிலும் பங்குப்பெற வேண்டும்; நீங்கள் ஆவியிலும் உண்மையிலும் ஆராதிக்க வேண்டும்.

முதலாவது, ஆவியிலும் உண்மையிலும் ஆராதிப்பதற்கு நீங்கள் தாமதமாக ஆராதனைக்கு வரக்கூடாது. நீங்கள் ஆராதனைக்கு முன்பாக 10 முதல் 20 நிமிடங்களுக்கு முன்னதாகவே வந்து ஜெபத்துடன் நீங்கள் உங்களை ஆயத்தப் படுத்த வேண்டும். ஆராதனை ஆரம்பித்தவுடன், நீங்கள் அடுத்தடுத்த நிகழ்ச்சிகளில் ஆசீர்வாதம் கூறல் அல்லது கர்த்தரின் ஜெபத்துடன் முடியும்வரை கவனமாய் பங்குப்பெற வேண்டும். ஆராதனைகளுக்காக தன்னார்வ பணி செய்கிறவர்களுக்கு விதிவிலக்கு என்று இருந்தாலும், அவர்களும்கூட காலை ஆராதனையில் ஆசீர்வாதம் கூறலில் ஆசீரை பெற வேண்டும்.

கூடவே, நீங்கள் பகல்கனா காணாதபடி அல்லது தூங்கி விழாதபடி செய்தியில் கவனம் செலுத்த வேண்டும். ஜெப நேரத்தில் நீங்கள் ஜெபிக்க வேண்டும், தேவனை நீங்கள் துதிக்கும் போது நீங்கள் துதிபாடல் வரிகளில் உங்கள் இருதயத்தை வைத்து அதைப் பாடவேண்டும். உங்களுக்கு நல்ல தோற்றமிருந்தால், நீங்கள் தேவனுக்கு ஆராதனையில் அதிக அழகான தூபத்தை ஏறெடுக்க முடியும்.

உதாரணமாக, ஆராதனை நேரத்தில் தங்கள் தலையில் மருத்துவ காரணத்தினால் ஏதோ ஒன்றை அணிய வேண்டும் என்ற நிலையிலுள்ள சில மக்களை தவிர, தேவனுக்கு முன்பாக உங்கள் தொப்பிகளை கழற்றிவிடுவது என்பது நன்நடக்கையாகும். கூடவே, தேவனுக்கு பிரியமுள்ள ஆடைகளை நீங்கள் உடுத்தினால் தேவன் மிகவும் பிரியப்படுவார்.

நீங்கள் தேவனுடைய ஆலயத்தை அதிக விலையேறப்பெற்றதாக நினைக்க வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். லேவியராகமம் 26:2 சொல்கிறது, “என் ஓய்வு நாட்களை ஆசரித்து, என் பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்துப் பயபக்தியாயிருப்பீர்களாக; நான் கர்த்தர்.”

வேதாகமத்தில் இஸ்ரவேல் புத்திரர்கள் இன்று தேவாலயம் போல இருக்கிற ஆசரிப்புக்கூடாரத்தை கர்த்தருடைய வீடு என்று அழைத்தார்கள். ஆலயம் என்பது தேவனுடைய பரிசுத்த வீடு; ஆலயத்தில் தேவன் வசிக்கிறார்.

ஆகையால், நீங்கள் ஆலயத்தில் இருக்கும்போது, நீங்கள் சின்ன செயல் அல்லது வார்த்தையிலும்கூட மிக கவனமாக இருக்க வேண்டும். உலக பிரகாரமான காரியங்களை குறித்துப் பேசுவது உட்பட தெய்வ பயமற்ற எந்த ஒரு காரியத்தையும் நீங்கள் செய்யக்கூடாது. பெற்றோர்களும்கூட தங்கள் பிள்ளைகளை ஆலயத்தில் அல்லது தேவாலயத்தை குறித்து கட்டுப்பாடு இல்லாமல் ஓட கூடாது எனவும் போதித்து நடத்த வேண்டும்.

கூடவே, நீங்கள் எப்பொழுதும் தேவனுடைய ஆலயத்தை சுத்தமாக வைக்க வேண்டும். நீங்கள் தேவாலயத்தில் எதையும் புசிக்கக்கூடாது. தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் அழுகையை நிறுத்துவதற்கு சாப்பிட ஏதாவது குழந்தைகள் அறையில் தருவார்கள் என்பது உண்மை. ஆனால் மற்ற ஆராதனை ஸ்தலங்களில் குறிப்பாக ஆராதனை நேரங்களில் எந்த ஒரு புசிப்பும் இருக்கக்கூடாது. தேவனை ஆராதிக்கையில் எதையும் புசிப்பது அல்லது குடிப்பது என்பது சரியல்ல. ஆலயத்தில் உள்ள பொருட்களையும் உபகரணங்களையும் நீங்கள் பராமரிக்க வேண்டும். ஆலயத்தில் உள்ள அனைத்தும் தேவனுடையது. எல்லாம் பரிசுத்தமுள்ளது. ஆலயத்தில் உள்ள உபகரணங்களை சபைக்கு வெளியிலே நீங்கள் பயன்படுத்த வேண்டுமாயின் நீங்கள் திருச்சபையிலிருந்து அனுமதி பெற வேண்டும்.


கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, கர்த்தருடைய நாள் என்பது நாம் ஆவிக்குரிய ரீதியில் புதிதாக்கப்பட்டு அடுத்த வாரத்திற்கு ஆயத்தமாகுகிற நாளாயிருக்கிறது. பிரசங்கிக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை கவனிப்பதன் மூலமாக, நாம் நம்மை அவற்றில் நினைவுபடுத்தி அதில் மீண்டும் வாழ்கிறவர்களாவோம். துதிப்பதாலும் ஜெபிப்பதாலும் நாம் உலகை மேற்கொள்ளக் கூடிய தேவனளித்த ஆவிக்குரிய வல்லமையால் பெலப்படுத்தப்படுவோம்.

ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிப்பதன் மூலமாக நீங்கள் தேவனுடைய ஆசீர்வதிக்கப்பட்ட பிள்ளைகளாக மாற வேண்டும் என உங்களுக்காய் ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]...” [அப். 17:25]
“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]



# விரைவான பதில்களுக்கான ஓர் பாத்திரம்

**பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியங்கொண்டிருந்து அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாகப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ, அதை அவராலே பெற்றுக்கொள்ளுகிறோம் (1 யோவான் 3:21-22). தம்முடைய அன்பான பிள்ளைகளுக்காக எவ்வகையான ஜெபங்களுக்கும் தேவனால் பதில் தர முடியும். மேலும் அவர் பதிலளிப்பதில் பிரியப்படுகிறார். ஆனால் அவருடைய பதில்களை எப்படி விரைவாக கீழே கொண்டு வருவது என்பதை புரிந்துகொண்டு அவைகளை நாம் செயல்படுத்த வேண்டும். நாம் சில வழிகளை பார்ப்போம்.**

## ◈ இரட்சிக்கப்படுவதற்கு விசுவாசத்தில் நிச்சயமுள்ளவர்களாய் இருங்கள்

தேவன் அற்புத அடையாளங்களை நிகழ்த்துவதற்கு காரணம் என்னவென்றால், இன்னும் ஒரு ஆத்துமா இரட்சிப்புக்கு ஏதுவான விசுவாசம் பெற்று பரலோகம் செல்ல வேண்டும் என அவர் விரும்புகிறார். நீங்கள் அவருடைய மகத்தான கிரியைகளை அனுபவித்திருந்தாலும்கூட, நீங்கள் உங்கள் மனதை மாற்றி தேவனிடத்திலிருந்து திரும்பிவிட்டால் அது எதற்கும் பிரயோஜனமில்லாமல் போய்விடும்.

லூக்கா 17:11–19ல், இயேசுவானவர் பத்து குஷ்டரோகிகளை சொஸ்தமாக்கினார். அவர்களில் ஒன்பது பேர் போய்விட்டனர். அவர்களில் ஒருவன் மட்டுமே திரும்பி வந்து தேவனை மகிமைப்படுத்தினான். ஒன்பது குஷ்டரோகிகளும் அவர்கள் சுகம் பெறுவதற்கு போதிய விசுவாசம் இல்லாவிட்டாலும்கூட இயேசுவின் வல்லமையினால் சுகம்பெற முடிந்தது. இதேபோல், இன்றைக்கும் இப்பேர்பட்ட ஆவிக்குரிய விசுவாசம் இல்லாமல் சுகம் பெறுபவர்களில் முக்கால்வாசி பேர் மாறி போய்விடுகிறார்கள். ஆதலால், தேவனிடமிருந்து பதிலை பெறுவதற்கு, அவருடைய வல்லமையை அனுபவிக்க தகுதியான விசுவாசத்தை நாம் கொண்டிருக்க வேண்டும். நாம் இரட்சிக்கப்படுவதற்கேதுவான விசுவாசத்தில் நாம் நிற்கும்போது மட்டுமேதான் நம்மால் மெய்யான பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற முடியும்.

மனநிலை கோளாரு உள்ளவர், பிசாசினால் பீடிக்கப்பட்டு கஷ்டப்படுபவர் அல்லது சிறுபிள்ளைகள் போன்றவர்களால் தாங்களாகவே விசுவாசத்தை கொண்டிருக்க முடியாது என்பது உண்மைதான். அதனால், அவர்களது பெற்றோர்களோ அல்லது நெருங்கிய உறவினர்களோ அவர்களுக்காக விசுவாசத்தோடும் அன்போடும் ஜெபிக்கலாம். அவர்கள் பாவங்களை களைந்துபோட்டு, பரிசுத்தமாகி, வியாதியஸ்தர்களின் சார்பாக சிறந்த பரலோக வாசஸ்தலங்களுக்காக வாஞ்சையோடு ஒளியிலே நடக்கும்போது, அவர்கள் பதில்களையும் பெற முடியும்.

## ◈ உங்கள் இருதயத்திலிருந்து உண்மையான அன்பை உணருங்கள்

மகதலேனா மரியாள் இயேசுவை சந்தித்தபோது உண்மையான அன்பையும் சத்தியத்தையும் உணர்ந்தாள். அவள் அவரை சந்தித்த காரணத்தாலே தனது வேதனையான வாழ்வுக்காக தேற்றப்பட்டதாகவும் ஈடுசெய்யப்பட்டதாகவும் உணர்ந்தாள். எந்த ஒரு சூழ்நிலையிலும் அவருக்காக அவளது அன்பும் சேவையும் ஒருபோதும் மாறவில்லை. அவளுக்கு அப்பேர்பட்ட இருதயம் இருந்ததால், அவளால் ஒரே நேரத்திலே எல்லா வகையான வியாதிகளிலிருந்தும் சுகம் பெற முடிந்தது. ஆண்டவருடைய உயிர்த்தெழுதலை கண்ட முதல் நபராக இருக்க முடிந்தது.

அவள் செய்ததுபோல, நாமும் தேவனுடைய அன்பை நம்முடைய இருதயத்தின் ஆழத்திலிருந்து உணர்ந்து உண்மையான அன்பை நாம் அடையப்பெற வேண்டும். நாம் மாம்சீக எண்ணங்களை களைந்துப்போட்டு, ஆவிக்குரிய விசுவாசத்தை கேட்க வேண்டும். நீங்கள் உண்மையில் தேவனை நேசித்தால் நீங்கள் எதிர்பார்த்த காரியங்களை பெறா விட்டாலும்கூட நீங்கள் ஏமாற்றமடையமாட்டீர்கள்.

பிறவி ஊனத்துடன் இருக்கிற ஒருவர் சுகம்பெற விரும்புகிறார் என வைத்துக்கொள்வோம். அவர் தேவனைப் பிரியப்படுத்துகிற விசுவாசத்தையுடையவராய் இருந்து அவருடைய இருதயத்தை அசைக்க வேண்டும். ஊனங்களை சுகமாக்குகிற தேவனுடைய கிரியை இந்த உலகத்தின் எந்த ஒரு அறிவையோ அல்லது கல்வி யூக வேலைகளையோ சார்ந்தது அல்ல. ஆகவே ஒரு நபர் அப்பேர்பட்ட உலக அறிவை பயன்படுத்தினால், அவனால் உண்மையான விசுவாசம் கொண்டிருக்க முடியாது.

அவன் மாம்சீக எண்ணங்களை அழித்து தேவனை பிரியப்படுத்த வேண்டும். அதனால், தேவனுடைய இருதயத்தை அசைக்கிற நீதியை நிறைவேற்ற வேண்டும். அவன் நீதியின் அளவை நிறைத்தால், அப்போது அவனுக்கு சுகமாகிற விசுவாசம் கொடுக்கப்படும். தேவன் அவன்மீது கிரியை செய்வார்.

## ◈ இடைவிடாத துதி ஸ்தோத்திரத்துடன் கூடிய வாழ்வு வாழுங்கள்

ஒருவன் கணக்குப் போடுகிறவனாய் இருந்தால், அவன் பெறும்போது மட்டுமே கொடுப்பான். அவன் ஒன்றைப் பெறும்போது, ஒன்றை கொடுப்பான். அவன் ஒன்றை கொடுக்கும்போது ஒன்றை திரும்ப பெற விரும்புவான். இப்பேர்பட்ட நபர் ஒருவன் கிருபைக்கு கைமாறு செய்ய வேண்டும் என நினைப்பான். தான் செய்த கிருபைக்கு பிறர் கைமாறு செய்யாவிட்டால் அவன் அசௌகரிகத்தை உணருவான். அவன் தன்னை அதிகமாய் அர்ப்பணித்து விதைத்துள்ளபடியால் தேவனிடத்திலிருந்து கிருபை பெற எதிர்பார்ப்பான். தான் பெற வேண்டும் என அவன் நினைக்கிற அளவு அவன் கிருபை பெறாவிட்டால், அவன் ஏமாற்றமடைந்ததாகவும் கஷ்டப்படுவதாகவும் உணருவான்.

அன்பின் தேவன் மன்னிக்கிறார், பின்பு மீண்டும் மன்னிக்கிறார். தங்கள் பாவங்களை அறிக்கைச் செய்து மனந்திரும்புகிற பட்சத்தில் பாவம்செய்து தம் இருதயத்தை உடைக்கிறவர்களையும்கூட அவர் மன்னிக்கிறார். நாம் தேவனுக்கான விசுவாசத்தோடும் அன்போடும் எதையாகிலும் நாட்டும்போது, அவர் நமக்கு அமுக்கி குலுக்கி சரிந்து விழும்–படியாகவும் முப்பதும் அறுபதும் நூறுமாகவும் நமக்குத் தருவார். தேவனுடைய அன்பு மகா பெரியது. அவருடைய இருதயத்தின் ஆழத்தையும் மகத்துவத்தையும் நம்மால் கிரகிக்க இயலாது.

நீங்கள் அவருடைய மகா பெரிய அன்பை அறிந்துணர்ந்தால், நீங்கள் சந்தோஷத்தை உணர்வீர்கள். நீங்கள் அவர் அன்பை குறித்து நினைக்கையில் நீங்கள் உங்கள் ஆஸ்தி, உடைமை மற்றும் உயிர் போன்ற எதையுமே பொருட்படுத்தமாட்டீர்கள். நீங்கள், ''நான் இவ்வளவு செய்துள்ளேன், ஆனால் எதுவுமே எனக்கு செய்யப்படவில்லை'' என்று நினைக்கமாட்டீர்கள். நீங்கள் அவருக்கு என்ன கொடுக்கலாம் என்று மட்டுமே நினைத்து அதை ஊக்கமாக செய்வீர்கள். உங்கள் வாழ்வில் எந்த ஒரு விலைகிரயம் இல்லாமல் தேவனிடத்திலிருந்து நீங்கள் பெற்ற கிருபையை எப்போதும் நினைப்பதால் நீங்கள் இடைவிடாமல் துதிஸ்தோத்திரம் செலுத்துவீர்கள்.

## ◈ மனந்திரும்புதலில் பாவசுவரை அழித்து விசுவாசத்துடன் ஜெபியுங்கள்

அஞ்சனம்பார்க்கிறவன் அல்லது குறிசொல்லுகிறவன் மற்றும் விக்கிரக ஆராதனைக்காரர்கள் அவர்கள் அழிக்கப்படும்படிக்கு கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டும் என்று பழைய ஏற்பாடு சொல்கிறது (லேவியராகமம் 20; உபாகமம் 13,17). விக்கிரகங்களை பயங்கரமாக வழிபடுகிற குடும்பங்களில் பல பாடுகளும் பிரச்சனைகளும் இருக்கும் (யாத்திராகமம் 20:3–6). அவர்கள் தேவனை விசுவாசித்தாலும்கூட, அவர்களது கிறிஸ்தவ வாழ்வு இடையூறு செய்யப்படலாம். ஆராதனை நேரத்தில் அவர்கள் தூங்கி விழுவார்கள். அவர்கள் பல ஆண்டுகள் வார்த்தைகளை கேட்டாலும்கூட அவர்கள் புரிந்துக்கொள்ள மாட்டார்கள் அல்லது அவர்களால் ஜெபிக்க முடியாமல் இருப்பார்கள்.

மேலும், ஒருவன் அசுத்த ஆவிகளோடு தொடர்புகொள்வதில் மந்திரவாதம், சூனியம் செய்வதை பயிற்சித்தால் அல்லது தன் ஆவியை விற்றால், அது தேவனுடைய இறையாண்மையை மீறுகிறதாகும். இது ஒருவன் தன் வரம்பை கடப்பதாகும். தேவனுடைய கோபம் அவன்மீது வரும், அசுத்த ஆவிகள் அவன் தங்களது இரை என நினைக்கும். ஆகவே அவன்தானே கிறிஸ்தவனாக மாற முயற்சித்தாலும், இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதிலிருந்து அவனை நிறுத்த அவைகள் எல்லாவற்றையும் முயற்சிக்கும்.

தேவனுக்கு முன்பாக இப்பேர்பட்ட பாவசுவரை கட்டி எழுப்பியுள்ள நபர், தேவனை விசுவாசித்து இரட்சிக்கப்படுவது என்பதே அவனுக்கு மிகப் பெரிய ஆசீர்வாதம். அவன் இந்த மிகப் பெரிய ஆசீர்வாதத்திற்காக நன்றி செலுத்தி இடைவிடாமல் ஜெபித்து விசுவாசத்தோடு ஆராதனைகளை ஏறெடுக்க வேண்டும். அப்போது தேவன் அவனது மனோவாஞ்சைகளை நிறைவேற்றுவார். ஆனால் அவன் பதில்களை பெறுவதற்கு அதிகமான முயற்சிகளை பிரயாசங்களை வைக்க வேண்டும். ஆனால் அவன் விசுவாசத்தில் இடைவிடாமல் ஜெபித்தால், அவனால் மனந்திரும்புதலின் கிருபையை பெற முடியும். ஆசீர்வாதங்களுக்கும் பதில்களுக்கும் நேராக நடத்தப்படுவான்.





# “பரிசுத்த ஆவியானவரின் அக்கினியால் நான் கொடிதான ஆஸ்துமாவிலிருந்து சுகமானேன், கருப்பை கட்டியும் நீங்கியது”

கண்காணியை யுன்ஹி கிம், வயது 57, மாகாணம் 29, மான்மின் தலைமை சபை

என்னுடைய வேலையை காரணம்காட்டி நான் ஜெபிப்பதை அலட்சியம் செய்தேன். என்னுடைய போதகர் சொல்லியும் ஜெபத்திற்கு வரவில்லை. நான் கீழ்ப்படியாததற்காக வருத்தப் பட்டேன். எப்படியிருந்தாலும், என் மகளின் குழந்தையை பார்த்–துக்கொள்ள உதவும்படி என் வேலையில் சிறிது இடைவெளி எடுத்துக்கொண்டேன். இதனால் இரண்டு ஆண்டுகளாக சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தில் பங்குப்பெற்று வருவதால், நான் ஜெபத்தினால் அருளப்படும் மகிழ்ச்சியை உணர துவங்கினேன்.

2016ல், அக்டோபர் 10 முதல் நடைபெற்ற சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தின்மீது எனக்கு ஒரு பிரத்யேக வாஞ்சை ஏற்பட்டது. அந்த நேரத்தில், கொடிதான ஆஸ்துமா மார்புச்சளியின் நிமித்தம் இரண்டு மாதங்களாக நான் இருமிக் கொண்டே இருந்தேன், என் குரல்வளத்தையும்கூட இழந்துபோனேன். அவை தேவனால் சுகமாக வேண்டும் என நான் விரும்பினேன். அப்படிப்பட்டதொரு வலிமையான வாஞ்சையோடு க்யொங்கி–டோ மாகாணத்தின் சான்பொன் என்ற இடத்திலிருக்கும் என் வீட்டிலிருந்து குரோடோங்கில் உள்ள தலைமை சபைக்கு சில பேருந்துகள் மற்றும் சுரங்கப்பாதை ரயில்கள் மூலமாகச் சென்றேன். ஆனாலும் அவை எனக்கு கடினமாக இல்லை. நான் சபைக்கு வரும்போதெல்லாம் வல்லமையான மூவான் மதுர தண்ணீரை விசுவாசத்தோடு பருகி ஜெபித்தேன்.

என் சிறு பிராயத்தில் மோசமான சூழ்நிலையின்நிமித்தம் எனக்கு ஆஸ்துமா மார்புச்சளி இருந்தது. ஒருமுறை நான் இருமத்துவங்கினால், அது சில மாதங்களுக்கு நிற்காது. அது ஒரு பெரிய வாழ்க்கை பிரச்சனையாக இருந்தது. இருமல்நிமித்தமாக 21 நாட்களாக என்னால் துதிக்கும்போதும் ஜெபிக்கும்போதும் என் குரலை பயன்படுத்த முடியாமல்போனது. அதைக் குறித்து நான் வருத்தப்பட்டேன்.

எப்படியிருந்தாலும், அக்டோபர் 31 அன்று, சிறப்பு தானியேல் ஜெபத்தின் இரண்டாவது பகுதி ஆரம்பமானபொழுது பரிசுத்த ஆவியானவரின் ஆச்சரியமான கிரியை என் வாழ்க்கையில் நடந்தது. அந்த நாளில், நான் வீட்டிலிருந்து சபைக்குப் புறப்பட்ட–பொழுதும் சந்தோஷமாகவே காணப்பட்டேன். நான் மிகுந்த கிருபையை பெற்றேன். நான் கண்ணீர் சிந்த துவங்கினேன்; ஆயத்தப்பாடல் வேளையின்போதே முழுமையான மனந்திரும்பு–தலின் கிருபை எனக்கு அருளப்பட்டது.

மகா அன்பின் தேவன் என்னை இரட்சித்து, புதிய எருசலேமிற்கு என்னை வழிநடத்தி கொண்டிருந்தாலும் தேவ வார்த்தையின்படி வாழாமல் நான் பிறரை குற்றப்படுத்தி, கோபமடைந்ததை குறித்து மனந்திரும்பினேன். நான் நீண்ட நேரமாக மூக்கிலிருந்து நீர் ஒழுக அழுது ஜெபித்தேன். உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை என் சரீரம் முழுவதையும் பரிசுத்த ஆவியானவரின் அக்கினி சுட்டெரித்ததை நான் உணர்ந்தேன். மின்சாரம் பாய்ந்ததைப் போல நான் உணர்ந்தேன்.

அதன்பின்னர் இருமல் நின்றது, என் குரலை பயன்படுத்தி பேச துவங்கினேன். ஒவ்வொரு நாளும் என் குரலைப் பயன்படுத்தி நன்றி செலுத்தி சந்தோஷமடைந்து, இறுதியாக சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தின் இரண்டாவது பகுதியை முடித்தேன். அதுமுதற்கொண்டு, நான் எவ்வித பிரச்சனையுமின்றி ஆரோக்கியமாக இருந்துவருகிறேன்.

டிசம்பர் 7 அன்று, எனக்கு நடந்த இன்னொரு ஆச்சரியமான காரியத்தை கண்டறிந்தேன். பத்து வருடங்களுக்கு முன்பு எனக்கு மூன்று கருப்பை கட்டி இருந்தது, அவை 1 செ.மீ லிருந்து 3 செ.மீ வரை வளர்ந்தது. இன்னும் அவை பெரிதாக வளர்ந்துவிட்டால் அறுவைச் சிகிச்சை கட்டாயம் செய்துவிட வேண்டும் என்று எனக்குச் சொல்லிவிட்டார்கள். ஆனால் டிசம்பர் 7 அன்று, கருப்பை கட்டிக்காக வழக்கமான பரிசோதனை செய்யும்படி சாம்சங் சீயோல் மருத்துவமனைக்கு நான் சென்றேன். என் மருத்துவர் புரியாதவராய் தலையை அசைத்து கொண்டே அல்ட்ராசோனோகிராபி பரிசோதனையில் எந்தக் கட்டியும் இல்லை என்று சொன்னார்.

நான் ஆச்சரியமடைந்தவளாய் மீண்டும் அவரை பரிசோதிக்கச் சொன்னேன், அவர் மீண்டும் கட்டி இல்லை என்றே சொன்னார். அந்த நேரத்தில் சிறப்பு தானியேல் ஜெபக்கூட்டத்தின்போது நான் பரிசுத்த ஆவியானவரின் அக்கினியை பெற்றுக்கொண்டதை நினைவுகூர்ந்தேன்; என் சரீரம் இலகுவாகவும் ஆரோக்கியமாகவும் இருந்ததை உணர்ந்தேன். அந்த நேரத்தில்தானே அனைத்து பிரச்சனைகளும் நீங்கியிருக்கிறது.

தற்போது என்னிடத்தில் அதிக குறைகள் இருந்தாலும் ஆவியின் நிறைவோடு கிறிஸ்தவ ஜீவியத்தில் ஓடும்படியாக தேவன் எனக்கு ஆச்சரியமான கிருபைகளை அருளினார்; அவருக்கு சகல நன்றிகளையும் மகிமையையும் செலுத்துகிறேன். எனக்காக எப்பொழுதும் ஜெபிக்கிற தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கும், ஒவ்வொரு நாள் இரவும் தானியேல் ஜெபக்கூட்டத்தை ஆவியின்நிறைவோடு நடத்துகிற திருமதி. போக்னிம் லீ அவர்களுக்கும் நான் நன்றிசெலுத்துகிறேன்.

# “நன்றாக நடக்கமுடியாத என்னால் இப்பொழுது கால்பந்துகூட விளையாட முடியும்”

சகோதரர் லைஜெர்மா, வயது 11, கின்ஷாசா மான்மின் சபை, குடியரசு காங்கோ



நான் இன்னும் சிறியவனாய் இருந்தது முதல் எனக்கு பிறவிசார்ந்த நிணநீர் நீர்க்கட்டி இருந்தது. என்னுடைய இடது கால் வீங்கி சீழ் வழிந்துகொண்டிருக்கும். என்னுடைய பாட்டி என்னை உடல் ஊனமுற்றோருக்கான மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றார்கள்; நான் எப்பொழுதும் மருந்துகளை பயன்படுத்த வேண்டியிருந்தது.

நான் மற்ற பிள்ளைகளைப் போல விளையாட விரும்பினாலும் என் கால்களின்நிமித்தம் என்னால் சரிவர நடக்க முடியவில்லை. நான் மிகவும் வேதனையடைந்து வருத்தப்பட்டேன். யாருடைய உதவியுமின்றி என்னால் தனியாக எங்கும்போக முடியாது. என்னுடைய பாட்டியின் உதவியோடு மட்டுமே என்னால் போக முடிந்தது. எனக்கு அதிகமாய் வலி எடுக்கும்போது, என்னால் பள்ளிக்குச் செல்ல முடியாது.

2016 செப்டம்பரில், ஜீவனுள்ள தேவனுடைய சபையை சந்திக்க ஒரு கொரிய போதகர் வரவிருக்கிறார் என்றும், அவருடைய ஜெபத்தை நான் பெற்றுவிட்டால் சுகமாகிவிட முடியும் என்றும் என் பாட்டி கேள்விப்பட்டாள். அவள் என்னிடம் அங்கே சேர்ந்து போவோம் என்று அறிவுறுத்தினாள். நான் முதல் முறையாக ஒரு சபைக்கு போனேன். அங்கே உயர்திரு. ஹிசன் லீ அவர்களின் கைக்குட்டை ஜெபத்தைப் (அப். 19:11–12) பெற்றுக்கொண்டேன்.

ஜெபத்திற்குப் பிறகு, என் கால்கள் அதிக வித்தியாசத்தை உணர்ந்தன. என் கால்களில் பெலன் எனக்கு அருளப்பட்டதால் நான் நடக்க ஆரம்பித்தேன். எனக்கு வலி எதுவுமில்லை. இது ஒரு கனவுபோல இருக்கிறது. என் கால் வீக்கம் குறைந்துப்போய்விட்டது; நண்பர்களோடு நான் கால்பந்தும் விளையாட முடிகிறது. இப்பொழுது என் தாத்தாவும் அம்மாவும்கூட சபைக்கு வருகிறார்கள். கர்த்தருக்கே நான் நன்றிகளை செலுத்துகிறேன்.

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com